செ.வெ.எண்:178 நாள்:16.03.2018

திருநெல்வேலியில் சமூக நலத்துறை களப்பணியாளர்களுக்கு மாவட்ட அளவிளான கருவின் பாலினம் அறிவித்தல் தடை சட்டம் மற்றும் குறைந்து வரும் பெண் குழந்தை பாலின விகிதம் குறித்த ஒரு நாள் பயிற்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

----

திருநெல்வேலி பாளையங்கோட்டை சமூக நலத்துறை அலுவலக கூட்டரங்கில் சமூக நலத்துறை களப்பணியாளர்களுக்கு மாவட்ட அளவிளான கருவின் பாலினம் அறிவித்தல் தடை சட்டம் மற்றும் குறைந்து வரும் பெண் குழந்தை பாலின விகிதம் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் இன்று (16.03.2018) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு பயிற்சியை தொடங்கி வைத்து பேசியதாவது:-

நமது மாநிலம் சமூக நலத்துறை களப்பணிகளில் மற்ற மாநிலங்களில் காட்டிலும் சிறந்து விளங்கி வருகிறது. கர்ப்பிணி பெண்கள் பிரசவத்திற்கு பிறகு ஒரு சில இடங்களில் இறக்கும் நிலை உள்ளது. மேலும் கருவிலேயே பாலினத்தை அறிந்து பெண் குழந்தைகளை அபார்சன் செய்யும் நிலையும் உள்ளது. பொதுமக்கள் மற்றும் கர்ப்பிணிகளுடன் நெருக்கமான தொடர்பில் உள்ள நீங்கள் கர்ப்பிணி பெண்களுக்கு சத்தாண உணவுகளை உண்ணும் விழிப்புணர்வையும் கருவில் உள்ள சிசுவினை கண்டறிதல் குற்றம் என்ற விழிப்புணர்வையும் குழந்தை பராமரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு அரசின் திட்டங்களையும் எடுத்து கூற வேண்டும். குழந்தைகளுக்கு தடுப்பு ஊசி போடுதல்,கர்பகாலத்தில் தடுப்புஊசி போடுதல் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வேண்டும்.இப்பயிற்சியை சிறப்பாக கவனித்து தெரிந்து கொண்டு அனைத்து தரப்பினருக்கும் சிறப்பாக விழிப்புணர்வு எற்படுத்த வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.இந்திரா,ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.ஜெயசூர்யா மற்றும் அலுவலர்கள்,முக்கிய சேவிகா,கிராம சேவிகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் ,திருநெல்வேலி